## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 42/2020 | Date : 25.08.2023 | PW2 |
|---|---|---|
| Name: சின்ராஜ் | S/o. **கோபால்** | |
| Evidence Recorded Time: 12.46 P.M. to 01.00 P.M. | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

மனுவின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும், மனு சங்கதிகளை யார் சொல்லி தெரிந்து கொண்டேன் என்றால் மனுதாரர் சொல்லி தெரிந்து கொண்டேன். மனுவில் எவ்வளவு நஷ்டஈடு கோரியுள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் வனவாசியில் குடியிருந்து வருகிறேன். விபத்து நடந்த இடத்திற்கும், நான் குடியிருக்கும் இடத்திற்கும் எத்தனை கி.மீ துாரம் என்றால் நான்கு கி.மீ துாரம் இருக்கும். விபத்து நடந்த இடம் எந்த இடம் என்றால் நங்கவள்ளியிலிருந்து கக்குவான் மாரியம்மன் கோவில் செல்லும் வழியாகும், அந்த இடத்தில்தான் விபத்து நடைபெற்றது. மேற்படி நங்கவள்ளி முதல் கக்குவான் மாரியம்மன் கோவில் செல்லும் வழியில் நான் வசிக்கும் ஊர் இல்லை என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்ட நபர் எந்த வண்டியில் சென்றால் என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியும், வண்டியின் கலர் தெரியுமா என்றால் தெரியும். விபத்து நடந்த போது வண்டிக்கு என்ன சேதங்கள் ஏற்பட்டது வண்டியின் முன் பக்க வீல், மற்றும் வண்டியின் இதர பக்கங்களிலும் பலத்த அடிபட்டு சேதங்கள் ஏற்பட்டிருந்தது. எதிர்மனுதாரரின் வண்டி என்ன வாகனம் என்றால் டிஸ்கவர் இருசக்கர வாகனம் ஆகும், அது பிரவுன் கலரில் இருந்தது. எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு என்ன சேதம் ஏற்பட்டது என்றால் தெரியாது. விபத்து நடைபெற்ற உடன் மனுதாரரின் மனைவிக்கு தகவல் தெரிவித்தேன். தகவல் தெரிவித்துவிட்டு, மனுதாரரை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு, நான் மனுதாரின் வாகனத்தை ஆட்டோவில் ஏற்றி சென்று காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு வந்தேன். மனுதாரரின் மனைவி எனது தாயாரின் உடன் பிறந்த சகோதரி, எனக்கு சித்தி முறையாவர். எங்கள் ஊரில் இருந்து நங்கவள்ளி வரவேண்டும் என்றால் விபத்து நடந்த வழியில் வரவேண்டியது இல்லை என்றால் சரிதான். விபத்தின் போது நான் வாகனத்தை ஓட்டி சென்றதற்கு டிரிப் சீட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால்

இல்லை. விபத்து நடைபெறுவதற்கு முன்பு நான்  மனுதாரரிடம் பேசினேனா என்றால் பேசினேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் ரோடு நங்கவள்ளியில் இருந்து மல்லப்பனூர் செல்லும் ரோடு என்றாலும், மனுதாரர் நங்கவள்ளியில் இருந்து மல்லபனூர் நோக்கிவந்தார், எதிர்மனுதாரர் நங்கவள்ளியில் இருந்து குப்பனூர் சென்று கொண்டிருந்தார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் மனுதாரர் என் சித்தப்பா என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.  மனுதாரர் அடிப்பட்ட தகவலை கேட்டு அதன்பின்னிட்டுதான் நான் அவருடைய வாகனத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த வழிதடத்தில் நான் செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் குடிபோதையில் வேகமாகவும், ஆஜாக்கரதையாகவும் வந்து எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.